செ.வெ.எண்:819 நாள்: 29.11.2019

**புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (29.11.2019) நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் படித்து வேலைவாய்ப்பு தேடும் இளைஞர்களுக்கு தனியார் துறைகளில் பணியமர்த்தம் செய்யும் நோக்கத்தோடு புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் தொடர்ந்து பல்வேறு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்களின் மூலம் மாவட்டத்தில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் துறைகளில் புதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சியரகத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சென்னை போன்ற பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 28க்கும் மேற்பட்ட தொழில்துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கிய தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு தகுதியுள்ள நபர்களை தங்களது நிறுவனத்தில் பணிபுரிய தேர்வு செய்ய உள்ளனர்.

மேலும் இந்த தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு தேர்வு பெறும் இளைஞர்களுக்கு இன்று மாலை தொடர்புடைய தனியார் துறை நிறுவனங்களின் பணி ஆணைகள் வழங்கப்பட உள்ளது. இதுபோன்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை இளைஞர்கள் உரிய முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மணிகண்டன், தொழில் நெறி வழிகாட்டி அலுவலர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.